**செ.வெ. எண்: 472** **நாள்:21.07.2011**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க**
**மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்**
**திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில்**
**நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின்**
**தனி அலுவலர்களுடன் ஆய்வு**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி இன்று (21.7.2011) , மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூட்ட அரங்கில், அனைத்து நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின் தனி அலுவலர்கள் மற்றும் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித்திட்ட இணைப்பதிவாளர்கள்/பொது மேலாளர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அப்போது வட்டத் தலைமையகங்களில் மருந்தகங்கள் தொடங்குதல், கொள்முதல் கொள்கை, புதிய பொருள்களை அறிமுகப்படுத்துதல், அனைத்துப் பண்டகசாலைகளிலும் ஒரே விலையில் பொருள்களை விற்பனை செய்தல், விலை நிலை நிறுத்தும் நிதியின் பயன்பாடு மற்றும் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. மேலும் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மேற்கொண்டுள்ள புதிய விற்பனை முயற்சிகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் திரு.யத்தீந்திர நாத் ஸ்வேன், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.ப.அண்ணாமலை, இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு.ந.அசோகன், திரு.அ.சங்கரலிங்கம், திரு.இரா.ராஜேந்திரன், திரு.ம.ப.சிவன் அருள், இணைப்பதிவாளர் திரு.எம்.மோகன் மற்றும் இணைப்பதிவாளர்கள்/பொது மேலாளர்கள் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் மற்றும் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின் தனி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமை செயலக ச் ம், சென்னை**

.